சுருக்கம்

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் – மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் வேலையளிப்பவர்களுக்கு பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு பயிற்சி முகாம்கள் நடத்துதல் – இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அவர்களுக்கு அனுமதி அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஐ2) துறை

அரசாணை (நிலை) எண்.15

நாள்:31.01.2017
துன்முகி, தை 18,
திருவள்ளுவர் ஆண்டு 2048
படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.262, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஐ2) துறை, நாள் 12.11.2013.
2. அரசாணை (நிலை) எண்.174, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஐ2) துறை, நாள்23.12.2014.
3. இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், கடிதம் எண். L1/ 9373/13, நாள் 03.06.2016.
4. செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் கடிதம் எண். ஆ1/ 17959/ 2016, நாள் 18.10.2016.
5. தொழிலாளர் ஆணையரின் கடிதம் எண். W1/32016/16, நாள் 02.11.2016.

-----

ஆணை:-

மேலே ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்ட அரசாணைகளின் வாயிலாக முறையே 2013–2014 மற்றும் 2014–2015–ம் ஆண்டுகளில் கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் வேலையளிப்பவர்களுக்கு ரூ.32 இலட்சம் செலவில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய நிதியினைப் பயன்படுத்தி பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு பயிற்சி முகாம்கள் நடத்த இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அவர்களுக்கு அனுமதி அளித்து ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. 2016–2017–ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பு கீழ்க்கண்டவாறு:-

“கட்டுமானப் பணிகளில் தொழிலாளர்கள் அதிகமாக ஈடுபட்டு வரும் நிலையில் போதிய விழிப்புணர்வு இன்மையால் அவர்கள் விபத்திற்கு ஆளாவதைத் தடுக்கும் வகையில் கட்டுமான இடங்களிலேயே பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய நிதியில் இருந்து 32 இலட்சம் ரூபாய் செலவில் கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்ட அமலாக்கப் பிரிவு மூலம் பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்”.

.த.பி.பா.

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அவர்கள் மேற்கண்ட பாதுகாப்பு பயிற்சி குறித்த விழிப்புணர்வு முகாம்கள் நடத்துவது தொடர்பான கருத்துருவை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

4. மேலே நான்கு மற்றும் ஐந்தில் படிக்கப்பட்ட கடிதங்களின் வாயிலாக செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் மற்றும் தொழிலாளர் ஆணையர் ஆகியோர் மேற்கண்ட பயிற்சி முகாம்களை தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல நிதியிலிருந்து மேற்கொள்ள தங்களது ஒப்புதலை அளித்துள்ளனர்.

5. கவனமான பரிசீலனைக்குப் பின்னர், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையிலும், கட்டுமானப் பணியிடங்களில் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்த பயிற்சி வகுப்புகள் மிகவும் அத்தியாவசியமாக இருப்பதாலும், 2016–2017–ம் ஆண்டிற்கு ரூ.32 இலட்சம் செலவில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய நிதியினைப் பயன்படுத்தி, பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்த பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்கு இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அவர்களுக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது. இந்நேர்விலான செலவினம் தொடர்பான பட்டியல்களை செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் அவர்களுக்கு அனுப்பி உரிய தொகையினை பெற்றுக் கொள்ளுமாறு இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், இக்கருத்துருவினை உரிய தருணத்தில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியக் கூட்டத்தில் வைத்து பின்னேற்பு பெறுமாறு தொழிலாளர் ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா. எண்.60955/L&E/2016, நாள் 21.11.2016–ன்படி இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

பெ.அமுதா,
அரசு செயலாளர்.

**பெறுநர்**
இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், சென்னை–600 014.
தொழிலாளர் ஆணையர், சென்னை–600 006.
செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்,
சென்னை–600 034.

**நகல்**
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–600 009.
மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை–600 009.

.த.பி.பா.